NUHS
National University Health System

**Source**: Tamil Murasu, Page 3
**Date**: 7 May 2019

# மறுவாழ்வு சிகிச்சையை மேம்படுத்த புதிய திட்டம்

திருமதி தெரெசா டானின் முதுகுத்தண்டில் 15 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட காயத்தால் அவர் சக்கர நாற்காலியைச் சார்ந்திருக்க வேண்டியிருந்தது. இருப்பினும், ‘பயோனிக் எக்ஸோஸ்கெலிட்டன்’ எனப்படும் ஒரு வகை உபகரணத்தை அணிவதால் அவரால் இப்போது மீண்டும் நடக்க முடிகிறது.

நரம்பியல் தொடர்பான நோய்கள் காரணமாக சொந்தமாக நடக்க சிரமப்படும் திருமதி டான் உட்பட 36 நோயாளிகள், இந்த உபகரணங்களின் ஆற்றலைச் சோதிக்கும் ஆய்வில் பங்கெடுத்து உள்ளனர்.

நோயாளிகளின் மறுவாழ்வு சிகிச்சைக்கு இவை கைகொடுப்பதாகக் கூறப்படுகிறது.

தெமாசெக் ஃபவுண்டேஷன் உடனான கூட்டு முயற்சியில் ‘ஐமூவ்’ எனப்படும் இந்தத் திட்டம், நோயாளிகளின் நடமாட்டத்திற்கு இந்த உபகரணங்கள் எவ்வாறு பலனளிக்கின்றன என்பதை ஆராயும்.

பக்கவாதம், முதுகுத்தண்டு காயங்கள் போன்றவற்றால் அவதியுறும் நோயாளிகளுக்கு, குறிப்பாக மூத்தோரின் நடமாட்டத்தை இத்திட்டம் மேம்படுத்தும் என்று தேசிய பல்கலைக்கழக சுகாதார முறையின் (என்யுஎச்எஸ்) தலைமை நிர்வாகி பேராசிரியர் ஜான் வோங் இயூ லி தெரிவித்தார்.



அலெக்சாண்டிரா மருத்துவமனையில் ‘எக்ஸோஸ்கெலிட்டன்’ உபகரணங்களை அணிந்து இருக்கும் திரு காந்தி மயில்வாகனம், சிகிச்சையாளர்களின் உதவியுடன் மெதுமெதுவாக நடக்கிறார்.

**படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

அலெக்சாண்டிரா மருத்துவமனையில் நேற்று நடைபெற்ற திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் பேசிய அவர், நோயாளிகளுக்கு மறுவாழ்வு சிகிச்சை அளிப்பதில் சிகிச்சையாளர்களுக்கு இயந்திர உதவியுடன் கூடிய சாதனங்கள் துணைபுரிவதாகச் சொன்னார்.

நடமாட்டம் குறைவதற்கும் நீண்டகால உடற்குறைக்கும் முக்கிய காரணங்களில் ஒன்றாக பக்கவாதம் விளங்குகிறது. கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக பதிவான பக்கவாத சம்பவங்களின் எண்ணிக்கை ஆண்டு ஒன்றுக்கு 5,500லிருந்து 7,400ஆக உயர்ந்தது.

அலெக்சாண்டிரா மருத்துவமனை, என்டியுசி ஹெல்த், செயின்ட் லூக்’ஸ் எல்டர்கேர், செயின்ட் லூக்’ஸ் மருத்துவமனை, ஸ்ட்ரோக் சப்போர்ட் ஸ்டேஷன் ஆகிய ஐந்து இடங்களில் இந்த உபகரணங்கள் பயன்படுத்தப்படும்.

சுகாதாரப் பராமரிப்புத் துறையில் மேம்பட்ட மறுவாழ்வு சிகிச்சை அளிப்பதில் இத்தகைய உபகரணங்கள் எவ்வாறு உதவுகின்றன என்பதை ஆராயும் ஆசியாவின் முதல் சுகாதார முறையாக என்யுஎச்எஸ் விளங்குவதாகக் கூறப்படுகிறது.

## வீட்டுப் புதுப்பிப்புப் பணிகளில் மனைவியுடன் சேர்ந்து கணவன் மோசடி

வீட்டுப் புதுப்பிப்பு பணிகளில் 74 வீட்டு உரிமையாளர்கள், துணைகட்டுமான குத்தகையாளர்களிடமும் $1.6 மில்லியனுக்கும் அதிகமான தொகையை மோசடி செய்த குற்றங்களை அஸ்ருல் முகம்மது யூசோப், ஹுஸ்னியாத்தி ஒமர் தம்பதியர் ஒப்புக்கொண்டனர்.

ஹுஸ்னியாத்தி தமக்காக தமது நண்பரிடம் உள்வடிவமைப்பு நிறுவனத்தைத் தொடங்கச் சொல்லியிருந்தார். குறைந்த கட்டணத்தில் வீட்டைப் புதுப்பிப்பு செய்வதுடன் இலவசமாக குளிர்சாதன வசதியும் செய்து தருவதாக விளம்பரப்படுத்திய அந்நிறுவனம், வாடிக்கையாளர்கள், வீட்டுப் புதுப்பிப்பு பணியாளர்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை நிறைவேற்றவில்லை.

இந்த ஏமாற்றுத் திட்டத்தை வடிவமைத்த ஹுஸ்னியாத்தி, ஏறக்குறைய $1.8 மில்லியன் தொடர்புடைய 20 ஏமாற்றுக் குற்றங்களையும் ஒரு நம்பிக்கை மோசடிக் குற்றச்செயலையும் ஒப்புக்கொண்டார். அவருக்கு ஏழு ஆண்டுகள், ஒன்பது மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. கிட்டத்தட்ட $652,000 தொடர்புடைய ஏமாற்றுக் குற்றங்களை 39 வயது அஸ்ருல் முகம்மது நேற்று நீதிமன்றத்தில் ஒப்புக்கொண்டார். மீதித் தொகைக்கான 115 ஏமாற்றுக் குற்றங்கள் தண்டனையின்போது கவனத்தில் கொள்ளப்படும்.

முன்னைய குற்றங்களுக்காக 2017ஆம் ஆண்டு மே மாதம் முதல் ஆறு மாதச் சிறைத் தண்டனையை அனுபவித்து வந்தார் அஸ்ருல். இவர்களது ஏழு பிள்ளைகள் மூன்று முதல் 20 வயது வரையில் உள்ளவர்கள். பெற்றோர் சிறையில் இருப்பதால் நான்கு சிறு வயது பிள்ளைகள் வளர்ப்புப் பெற்றோர் பராமரிப்பில் உள்ளனர். மற்ற மூன்று பிள்ளைகளும் உறவினர்களுடன் வசிக்கின்றனர்.

அஸ்ருலுக்கு குறைந்தது ஐந்து ஆண்டுகள், ஒன்பது மாதங்கள் சிறைத் தண்டனை விதிக்கக் கோரி அரசாங்கத் தரப்புத் துணை வழக்கறிஞர் கிரேஸ் கோ வாதிட்டார்.

*Source:* Tamil Murasu © Singapore Press Holdings Ltd.
Permission required for reproduction